இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 06-07-2025

# இதில் என்ன பெருமை இருக்கிறது?

**மக்களுக்கு அநியாய வரி போடுவதையும், அந்த வரியை மக்கள் ஒழுங்காகச் செலுத்துகிறார்கள் என்பதையும் பெரிய சாதனையாகச் சொல்வது பா.ஜ.க. அரசாகத்தான் இருக்க முடியும். இதில் என்ன பெருமை இருக்கிறது? 'அநியாய, அக்கிரம வரியையும் சத்தமில்லாமல் மகிழ்ச்சியாகச் செலுத்துகிறார்களே?' என்ற மகிழ்ச்சியை இவர்கள் கொண்டாடுகிறார்களா?**

ஒன்றிய பா.ஜ.க. அரசாங்கத்தின் பகல் கொள்ளையாக இருப்பது ஜி.எஸ்.டி. என்று சொல்லப்படும் சரக்கு மற்றும் சேவை வரி ஆகும். ஜி.எஸ்.டி. வரி வசூல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. 2025 மே மாதத்தில் ஜி.எஸ்.டி. வரி வசூல் 2.01 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. இது 2024 ஆம் ஆண்டு மே மாதத்தை விட 16.4 விழுக்காடு அதிகம் ஆகும்.

2017 ஆம் ஆண்டு ஜி.எஸ்.டி. வரி அமலுக்கு வந்தது. 2020 ஆம் ஆண்டு ஜி.எஸ்.டி. வரி வசூல் 11 லட்சம் கோடி ஆகும். கடந்த ஆண்டு 20 லட்சம் கோடி ஆகும். கடந்த 5 ஆண்டுகளில் ஜி.எஸ்.டி. வரி வசூல் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. ஜி.எஸ்.டி.யின் கீழ் வரி செலுத்துவோர் எண்ணிக்கை 2017 ஆம் ஆண்டு 65 லட்சமாக இருந்தது. இப்போது 1.51 கோடி ஆகி இருக்கிறது. வரி என்பது அனைவரும் செலுத்த வேண்டியதுதான். அதில் விடுபடுதல், தப்பித்தல் கூடாது என்பதும் உண்மைதான். ஆனால் அந்த வரிகள் நியாயமானவையாக இருக்க வேண்டாமா?

பெரு நிறுவனங்களுக்கு ஆண்டுக்கு 1 லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் வரிச் சலுகைத் தள்ளுபடிகளை அறிவிக்கும் பா.ஜ.க. அரசு, ஜி.எஸ்.டி. வரி வசூலில் பெருமைப்பட என்ன இருக்கிறது?

**"பிரதமர் மோடி அரசால் அமல்படுத்தப்பட்ட ஜி.எஸ்.டி. என்பது வரிச் சீர்திருத்தம் அல்ல. பொருளாதார அநீதி. பெரு நிறுவனங்களுக்கு ஆதாயம் அளிக்கும் கொடூரமான கருவி. ஏழைகளைத் தண்டிக்கவும், சிறுகுறு நடுத்தரத் தொழில் நிறுவனங்களை நசுக்கவும், மாநிலங்களை குறைமதிப்புக்கு உள்படுத்தவும், பிரதமரின் சில பெரும் பணக்கார நண்பர்களுக்கு பலனளிக்கவும் வடிவமைக்கப்பட்டதாகும். 900 முறை திருத்தங்களைக் கண்ட இந்த ஜி.எஸ்.டி.யின் குழப்ப வலையில் கேமரல் பாப்கார்ன், க்ரீம் பன்களும் கூட சிக்கியுள்ளன" என்று சொல்லி இருக்கிறார் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி.**

வரி செலுத்துவோர் எண்ணிக்கை அதிகம் ஆனதும், வரித் தொகை அதிகம் ஆனதும் பொருளாதார உயர்வு எனக் கொண்டால், இப்படிச் செலுத்தப்படும் வரி மூலமாக ஒன்றிய பா.ஜ.க. அரசு மக்களுக்கு என்ன நன்மையைச் செய்துள்ளது? இதுதான் அடிப்படையாக எழும் கேள்வி ஆகும். இந்தப் பணம், வரி கொடுக்கும் மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்தப்பட்டதா? நேரடியாக மக்கள் பயன்பாட்டுக்குத் தரப்பட்டுள்ளதா?

**மக்களுக்கு நேரடியாகச் சேவை செய்ய வேண்டிய கடமை மாநிலங்களுக்குத்தான் இருக்கிறது. மாநில அரசுகளிடம்தான் மக்கள் எதிர்பார்ப்பார்கள். அந்த மாநிலங்களுக்கு ஜி.எஸ்.டி. வரியால் பயனுண்டா? ஜி.எஸ்.டி. வரிப்பணம், மாநிலங்களுக்கு உரிய அளவில் பகிர்ந்தளிக்கப்படுகிறதா? ஜி.எஸ்.டி. தரும் அளவுக்கு இல்லா விட்டாலும் குறைந்த அளவிலாவது தரப்படுகிறதா? ஏதுமில்லை.**

சம்பாதிக்கிறார்கள். அவ்வளவுதான். அதனால் எந்தப் பயனுமில்லை. பயனற்ற சம்பாத்தியத்தால் என்ன பயன்? பலன்?

ஜி.எஸ்.டி.தான் திருப்புமுனையான சீர்திருத்தம் என்று பெருமைப்பட்டுள்ளார் பிரதமர் மோடி. அவருக்கு திருப்புமுனைக்கும் பொருள் தெரியவில்லை, சீர்திருத்தத்தின் பொருளும் தெரியவில்லை. எல்லா வரிகளையும் ஒன்றாக்கப் போகிறோம் என்று சொல்லி 5 விழுக்காடு, 12 விழுக்காடு, 18 விழுக்காடு, 28 விழுக்காடு வரி போட்டதுதான் சீர்திருத்தமா? 'கம்ப்யூட்டரே குழம்பிப் போயிருது மேடம்' என்று நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் கோவை தொழில் அதிபர் புலம்பினார். இதனாலேயே அவர் மிரட்டப்பட்டார். இவர்கள் சீர்திருத்திய லட்சணம் இதுதான்.

**வரி இணக்கச் சுமையைக் குறைத்துள்ளதாக பிரதமர் சொல்லி இருக்கிறார். சுமையைக் குறைத்திருந்தால் இத்தனை லட்சம் கோடி வரி திரட்டி இருக்க முடியுமா? என்ன லாஜிக்கில் சொல்கிறார் பிரதமர்?**

இந்த வரி மூலமாக சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பாதிப்பு அடைந்தன என்பதுதான் உண்மை. ஆனால் பலனடைந்துள்ளன என்கிறார் பிரதமர். சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களை அழைத்து இது குறித்து நேரடியாகக் கேட்பதற்குத் தயாராக இருக்கிறாரா பிரதமர்? எத்தனை லட்சம் சிறு, நடுத்தர நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன என்பதை பிரதமர் முதலில் அறிய வேண்டும். தொழிலை மூடிவிட்டு, வேலைக்குப் போய்விட்டவர்களின் எண்ணிக்கையை அவர் அறிய வேண்டும்.

'நாட்டின் சந்தையை ஒருங்கிணைக்கும் பயணத்தில் மாநிலங்களை சம பங்காளிகளாக ஆக்குவதால் உண்மையான கூட்டுறவுக் கூட்டாட்சியை ஜி.எஸ்.டி. வலியுறுத்தி இருக்கிறது' என்று கூச்சமே இல்லாமல் வாய்ஜாலம் காட்டி இருக்கிறார் பிரதமர்.

**மாநிலங்களின் நிதி உரிமையையும், நிதி பலத்தையும் சுரண்டியதுதான் ஜி.எஸ்.டி. ஆகும். மாநிலங்களை பங்காளிகளாக அல்ல, பகையாளிகளாக நடத்தி வருவதுதான் ஜி.எஸ்.டி. ஆகும். சில ஆண்டுகளுக்கு ஜி.எஸ்.டி. இழப்பீடு கொடுத்தார்கள். பின்னர் அதனையும் நிறுத்தி விட்டார்கள். இழப்பீடு கொடுத்தாலே என்ன பொருள்? 'மாநிலங்களுக்கு இழப்பு' என்பதுதானே? இதுகூடவா பிரதமருக்குப் புரியவில்லை?**

இதை விட புத்திசாலி நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். அவர் சொல்லி இருக்கிறார், "வரி செலுத்துவோரின் சுமை குறைந்துள்ளது" என்கிறார். வரிகளால் கிடைக்கும் பணம் அதிகரித்தால், வரி செலுத்துவோரின் சுமை எப்படி குறையும்? மக்கள் ஜி.எஸ்.டி. வரியை, நன்கொடையாக நிர்மலா சீதாராமனுக்கு வாரி வழங்குகிறார்களா?




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.7.2025) தலைமைச் செயலகத்தில், கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் 25 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு கால்நடை நோய் புலனாய்வு பிரிவுக் கட்டடம், ஒரு கால்நடை மருத்துவமனை கட்டடம், 12 கால்நடை மருந்தகக் கட்டடங்கள், 2 மாவட்ட கால்நடை பண்ணை கட்டடங்கள், ஒரு நாய் வளர்ப்பு பிரிவு விரிவாக்க கட்டடம் ஆகிய கட்டடங்களை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் ந.சுப்பையன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கழகத்தை 7வது முறை அரியணை ஏற்ற உறுதியேற்போம்!

## இளைஞர் அணிச் செயலாளராக 7 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதையொட்டி – வலைதளப் பதிவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை!

**சென்னை, ஜூலை 6 -**

**கழக இளைஞர் அணிச் செயலாளராக நேற்று முன்தினம் 7 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்தார், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்!**

**இந்நாளையொட்டி, அவர் விடுத்த சமூக வலைதளப் பதிவில், "கழகத்தை 7வது முறையாக அரியணை ஏற்ற உறுதியேற்போம்" எனச் சூளுரைத்துள்ளார்.**

அந்த வலைதளப் பதிவு வருமாறு :-

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் உருவாக்கப்பட்ட இளைஞரணியின் செயலாளராக 7ஆம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதில் மகிழ்ச்சி கொள்கிறோம்.



திராவிடக் கருத்தியலை மனதில் ஏந்தி தமிழ்ச்சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகவும் கழகத்தை வலுப்படுத்திடும் வகையிலும், தலைவர் அவர்களின் சொல்லை செயலாக்குகிற பொறுப்பை உணர்ந்தே ஒவ்வொரு பணியையும் இளைஞர் அணி சார்பில் மேற்கொண்டு வருகிறோம்.

கடந்த 6 ஆண்டுகளில் நீர்நிலைகளை தூர் வாரியது முதல் கொரோனா காலத்தில் ஆற்றிய சேவைகள் என தொடரும் மக்கள் பணிகள் ஒரு பக்கம் தேர்தல் பரப்புரைகள், பாசிச சக்திகளுக்கு எதிரான போராட்டக் களங்கள் என அடுக்கடுக்கான கழகப் பணிகள் மறுபக்கம்.

### வலிமையான கட்டமைப்பு!

ஒவ்வொரு மாவட்டத்திலும் அடித்தளத்தில் இருந்து வலிமையான கட்டமைப்போடு இளைஞர் அணி இன்று மிக நேர்த்தியாக உருவெடுத்துள்ளது.

இன்றைக்கு 12,000க்கும் மேற்பட்ட பொறுப்பாளர்களோடு கழகத்தின் ராணுவமாய்த் திகழ்கிறது நம் இளைஞர் அணி. ஏதோ உட்கார்ந்த இடத்தில் இருந்து நிரப்பப்பட்ட பொறுப்புகள் அல்ல! இந்தப் பொறுப்பாளர்களை நியமிக்க ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட இளைஞர்களை நாமே நேர்காணல் செய்திருக்கிறோம்.

களத்தில் மட்டுமின்றி இணையத்திலும் கழகப்பணி ஆற்றிட சமூக வலைதளத்துக்கென கழக மாவட்டத்துக்கு ஒரு துணை அமைப்பாளரை நேர்காணல் மூலம் நியமித்து வருகிறோம்.

### இளம் பேச்சாளர்கள்!

நமது கழகத் தலைவரின் கட்டளையை ஏற்று, 17,000 பேர் பங்கேற்ற "என் உயிரினும் மேலான" பேச்சுப் போட்டியை நடத்தி கழகத்துக்கு 242 இளம் பேச்சாளர்களை கண்டறிந்து தந்திருக்கிறது இளைஞர் அணி.

ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் 'கலைஞர் நூலகம்' அமைத்து அறிவொளி வீசியும், நீட் விலக்கு இந்தித் திணிப்பு எதிர்ப்பு நிதி உரிமை உள்ளிட்ட மாநில உரிமைகளுக்காக பொதுக்கூட்டங்கள் மூலம் பிரச்சார மழை பொழிந்தும் ஓய்வின்றி நாளும் களத்தில் சுழன்று கொண்டிருக்கிறது நம் இளைஞர் அணி!

இளைஞர் அணியின் 2ஆவது மாநில மாநாடு 2024 மக்களவைத் தேர்தல் வெற்றிக்கு அடித்தளமிட்டது. அதுபோல, 2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத்துக்கு மாபெரும் வெற்றியைப் பெற்றுத் தர இளைஞர் அணி இப்போதே தயாராகி விட்டது.

### 'ஓரணியில் தமிழ்நாடு'

ஒன்றிய அரசு இழைக்கும் அநீதிகளுக்கு எதிராக தமிழ்நாட்டுக் குடும்பங்களை அணிசேர்க்கும் 'ஓரணியில் தமிழ்நாடு' முன்னெடுப்பை வெற்றியடையச் செய்ய அயராது களப்பணி ஆற்றும் இளைஞர் அணித் தோழர்கள் தான் என்னை ஊக்குவிக்கும் உற்சாகம்.

இந்த நேரத்தில் என் தோளோடு தோள் நிற்கும் இளைஞர் அணி நிர்வாகிகள் தம்பிமார்கள் அத்தனை பேருக்கும் என் நன்றிகள்.

இளைஞர் அணிச் செயலாளராக 7ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்நாளில், நம் கழகத்தை 7ஆவது முறை அரியணையில் ஏற்ற உறுதியேற்போம்!

இவ்வாறு அப்பதிவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# சமத்துவம் கூட்டுறவின் மகத்துவம் - மினி மாரத்தான் துவக்க விழா !

## அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் துவக்கி வைக்கிறார்!

*சென்னை, ஜூலை 6-*

*சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2025 மற்றும் சர்வதேச கூட்டுறவு நாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு, தமிழக கூட்டுறவுத்துறை சார்பில் COOPA THON மினி மாரத்தான் போட்டி நடைபெறவுள்ளது 'சமத்துவம் கூட்டுறவின் மகத்துவம்' "கூடுவோம், ஓடுவோம் கூட்டுறவால் உலகை வெல்வோம்" என்ற கருப்பொருளை கொண்டு மினி மாரத்தான் சென்னை தீவுத்திடலில் இன்று (06.07.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 05.30 மணியளவில் நடைபெறவுள்ளது.*

*கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் மினி மராத்தான் போட்டியை கொடியசைத்து துவக்கி வைக்க உள்ளார். மினி மாரத்தான் தீவுத்திடலில் தொடங்கி வெற்றி போர் நினைவுச் சின்னம், அண்ணா சதுக்கம், விவேகானந்தர் இல்லம் வரை சென்று மீண்டும் அதே பாதையில் தீவுத்திடல் வந்தடையும் மொத்த தொலைவு 5 கி.மீ ஆகும். இப்போட்டியில் 18 வயது தொடங்கி 40 வயது உடையவர்கள், மேலும் 40 வயது முதல் அதற்கு மேல் 2000 க்கும் மேற்பட்ட முன்பதிவு செய்துகொண்ட நபர்கள் ஆண், பெண் என கலந்து கொள்ள உள்ளார்கள்.*

*ஆண்கள் பிரிவுக்கு முதல் பரிசாக ரூ.30,000, இரண்டாம் பரிசாக ரூ.20,000 மூன்றாம் பரிசாக ரூ,10,000 வழங்கப்பட உள்ளது. பெண்கள் பிரிவுக்கு முதல் பரிசாக ரூ.30,000, இரண்டாம் பரிசாக ரூ,20,000 மூன்றாம் பரிசாக ரூ,10,000 என வழங்கப்பட உள்ளது. பங்குபெற்ற அனைவருக்கும் பதக்கம் மற்றும் சான்றிதழ்களை பதிவிறக்கம் (ONLINE DOWNLOAD) செய்யும் வகையிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான தனி ஏற்பாடுகள் தீவுதிடலில் செய்யப்பட்டுள்ளது.*

*இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலைத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி முன்னிலை வகிக்க உள்ளார்கள். அரசு முதன்மை செயலாளர், கூட்டுறவு உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்புத்துறை சத்யபிரதசாகு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் க.நந்தக்குமார் கூடுதல் பதி வாளர் (நுகர்பு பணிகள்) ச.பா.அம்ரித் மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கூட்டுறவாளர்கள், சீர்மிகு பெருமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.*



திருவெறும்பூர் தொகுதியில் கட்டி முடிக்கப்பட்ட நகர்ப்புற நல்வாழ்வு மையக்கட்டிடத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார். அதன் தொடர்ச்சியாக தமிழக பள்ளிகல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நகர்ப்புற நல்வாழ்வு மையத்தை நேரில் பார்வையிட்டார். திருச்சி மாநகராட்சி மண்டலம் மூன்றின் தலைவர் மு.மதிவாணன், திருச்சி மாநகராட்சி 42 வது வார்டு கவுன்சிலரும் காட்டூர் பகுதி செயலாளருமான நீலமேகம், திருவெறும்பூர் பகுதி செயலாளர் சிவகுமார், பகுதிச் செயலாளர் விஜயகுமார், மாமன்ற உறுப்பினர்கள் லிலாவேலு, Kkk கார்த்தி, நிர்வாகிகள், அந்த மருத்துவர்கள் செவிலியர்கள், மாநகராட்சி உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.